## 2.23 உதவி இயக்குநர் நிலையில் அனைத்து மாவட்ட ஊராட்சிகளுக்கும் முழு நேர செயலாளர் நியமனம் – பணியிடம் தோற்றுவிப்பு

ஊரக வளர்ச்சி (இ1) துறை

அரசாணை (நிலை) எண். 121 நாள் : 06.07.1999

**ஆணை**

மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு அதிக அதிகாரங்கள், பொறுப்புகள் மற்றும் பணிகள் வழங்குவது குறித்து 1997–98 ம் ஆண்டு அமைக்கப்பட்ட உயர்மட்டக்குழுவின் அறிக்கையில், ஏனைய பரிந்துரைகளுடன் கீழ்க்காணும் பரிந்துரையும் அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

குழுவின் அறிக்கை இயல் II– பரிந்துரை எண் 27

மாவட்ட ஊராட்சிக்கு என்று தனியாக முழு நேர செயலரை நியமனம் செய்யவும் இதனால் மாவட்ட ஊராட்சிக்கு ஒதுக்கப்படும் நிதியை பயன்படுத்தி திட்டங்கள் செயல்படுத்தும் முழு அதிகாரமும் மாவட்ட ஊராட்சிக்கு அளித்திட வேண்டும்.

2. மேற்கூறப்பட்ட உயர்நிலைக்குழுவின் பரிந்துரையை கீழ்க்கண்டவாறு ஏற்கலாம் என்று 03.05.99 அன்று நடைபெற்ற அமைச்சரவைக்குழு கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

> “18 உதவி இயக்குநர் நிலையில் அனைத்து மாவட்ட ஊராட்சிகளுக்கும் முழுநேர செயலர் நியமிக்கப்படுவார். அவரே மாவட்ட திட்டஅலுவலராகவும் செயல்படுவார்.”

3. மேலே பத்தி இரண்டில் உள்ள அமைச்சரவைக் குழுவின் முடிவின்படி ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் நிலையில் அனைத்து மாவட்ட ஊராட்சிகளுக்கும் முழுநேர செயலாளர் நியமிக்கப்படுகிறார். இதற்காக அனைத்து மாவட்ட ஊராட்சிகளுக்கும் ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் நிலையில் ஒரு பணியிடம் தோற்றுவிக்கப்படுகிறது. அவரே மாவட்ட திட்ட அலுவலராகவும் செயல்படுவார்.

4. இவ்வரசாணை நிதித்துறையின் 01.07.99 நாளிட்ட அலுவல் சார்பற்ற குறிப்பு எண் 2411/எப்.எஸ்/ப்பி/99–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்